உ

கடவுள் துணை.

பார்ஸி இந்துஸ்தான்

# அல்லி அர்ச்சுன

இரண்டாம்பாகம்.



சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928. [அணா-4.

ரிஜிஸ்தர் காப்பி ரைட்.

உ

பரமபதிதுணை.

---

டி. ஜி. ஜெகநாதநாயுடு, இந்துஸ்தான் கே. எம். தர்மலிங்கம்பிள்ளை டி. என். சாமிநாதமுதலியார், மனமோகன அரங்கசாமிநாயுடு சின்னமகாதேவய்யர், பெரியமகாதேவய்யர், பார்ஸி ஜெகன்மோகன குப்புசாமிமுதலியார், கானமோகன டி. எ. இராஜாமணி அம்மாள், மதுரை அயன்ராஜ பார்ட் பைரவ சுந்தரம்பிள்ளை கம்பெனியார் முதலானோர்கள் விசுசிதமாய் நடாத்திவருகிற பார்ஸி அதிவினோத

# அல்லி அரசாணி

சரித்திரம் இரண்டாம்பாகம்.

---

விநாயகர்துதி-வெண்பா.

பூவார் குழலல்லி பொற்கொடியாள் நற்சரிதை
நாவார நானிலத்தில் நன்கிசைப்ப-தேவாதி
தேவர்பணி யைங்கரனே சித்திபுத்தி நாயகனே
மாவரத்தைத் தந்தருள்வாய்.

12-வது சீன்.

அல்லிதர்பார் கொலுமண்டபம்.

தோழிகள் கூச்சலிட்டுக்கொண்டு அல்லியிடம் வருகின்றனர்.

அல்லி வசனம் தோழிகாள் என்ன சமாச்சாரம் இவ்வளவு அவசரத்துடன் வருகின்றீர்கள்.

இராகம்-நோட்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

நாங்களோ தண்ணீரெடுக்க வாவி நாடியே
நாயகி சென்றோ மெல்லா மொருங்கு கூடியே
கங்கையே மங்கையென் றுங்கள் பேரையே
அங்கொரு பேயன்சொல்லி மருந்துரைக்கிறான்
பாண்டியர் பயின்றெடுத்த பாவை மெல்லியே
பைங்கிளி என்றோடு சேரவாராயென்று சொல்லியே

பாதக் கிராதகன் உரைக்கிறனைதைப்
பார்த்த நாங்களும்மிடம் பகரவே வந்தோம்

(அல்லி வசனம்) (கோபாவேசத்துடன் எழுந்து) அடி தோழியர்காள் நான் குளிக்கும் குளத்திலா என்பெயரைச் சொல்லி மருந்துரைக்கின்றான்.

திங்கள் தன்னை சென்னி சூடும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

நான்குளிக்கு மக்குளத்தில்
நாரையும் பறக்குமோ

அநுபல்லவி.

ஆண்பிள்ளை வந்தானென்றால்
அவனுயிர் தரிக்குமோ

சரணங்கள்.

உயிர் தரித்தென்பே ரோதி மருந்துரைக்கவல்லவன்
உலகிலுண்டு மாயின்று என்னுற்றபேர் சொல்லி
சொல்லிக்குளிகை யுரைக்கத் தைரியங்கொள்
பவனிங்கில்லையே
இல்லையாகையால் இக்கவனையே
இழுத்து வாருங்கள் இமிசைசெய்யலாம்
எங்கிருந்தாலுஞ்சரி இழுத்துக்கொண்டுவாருங்கள்
மங்கையர்களேஎமது வர்மமெல்லாந்தீருங்கள் (நா)

அல்லி வசனம் அடிசேடியர்காள் என்னுடைய நாமதேயத்தைச்சொல்லி மருந்துரைக்கின்ற அந்தத்திருடனை இந்நிமிஷமே அவன்கால்களையும் கைகளையும் கட்டிக்கொண்டுபோய் ஆற்றின்சுடுமணலில்போட்டுக் கொல்லுங்கள் சீக்கிரம்.

தோழி வசனம். அம்மணி ஆக்ஞைப்பின்படி செய்கிறோம்.

தோழிகள் அர்ச்சுனனிடம் சொல்லுகிறார்கள்.

---

13-வது சீன்.

மருந்து உரைத்துக் கொண்டிருந்த அர்ச்சுனனை தோழிகள் கால்கைகளைக்கட்டி ஆற்றிற்கு கொண்டேகுறார்கள்.

---

ஆற்றங்கரை

தோழிகள் சுடுமணலில் நிறுத்துகிறார்கள்.

தோழிகள் வசனம். இந்த பீடத்திலிருங்கள் அல்லியிப்பொழுதுவருவாள் சந்தோஷ சாகரத்தில் மூழ்குவீர்.

அர்ச்சுனன் வசனம். அம்மா அப்படியே மகாபாக்கியம்.

அர்ச்சுனனுக்கு ஆற்றுமணல் சுடாதபடி குளிர்ச்சியும்
தென்றற்காற்று வீசும்படியாகவும் அல்லியினுடைய
தோழியர்களுக்கு ஆற்றுமணல் சுடும்படி
யாகவும் கிருஷ்ணன் செய்து
விடுகின்றார்.

---

தோழிகள் வசனம் என்னடி அக்காஈம்முடையபாதங்கள் இவ்வாற்றுமணலக்கினியினால் சிவந்து கொப்பளிக்கின்றது இவன் சந்தோஷத்துடன் அதிக சும்மாயிருக்கின்றானே என்ன ஆச்சரியம்மாந்தரீகந் தெரிந்தவனோ.

அர்ச்சுனன்.

மெல்லிடையாளல்லி என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்துசுகந் தந்தணைத்து மகிழ்வாளோ—ஆண்
வாடையாகாதென்று மனம் நொந்துமுனிவாளோ (வந்)

அநுபல்லவி.

சிந்தையில்விளங்க சேடியரேபதில்
செப்புவீ ரிப்போது
ஒப்பியே தப்பாது (வந்)

கேசியல்லியினால் நிற்கின்றேனாற்றில்
நேமியி னியவள்
தாமத மில்லாமல் (வந்)

இவ்விடத்தைநாடி என்னையவள்தேடி
எங்கேவ ரக்காணு
மிங்கேவ ருந்துகிறேன் (வந்)

(வசனம்) அம்மா எங்கே உங்களரசியாகிய அல்லிநாயகி இன்னும் வரக்காணேமே இப்பொழுதுவருவாள் என்று சொன்னீர்களே அவளை நினைந்துநினைந்து என்னெஞ்சமானது மிக்கவருந்துகின்றதே எப்பொழுது வருவாள்.

(தோழிகள்வசனம்),என்னடி அக்கா இந்தகொடிய சூடான மணலில் நின்றுகொண்டு இவன் நம்மள் அல்லிராணியம்மாளை எப்

போது வருவாளென்று கேட்கின்றான் வாருங்கள்நாம்செல்லலாம்கூடு பொறுக்க முடியவில்லை இவனுடைய சங்கதிகளை ராணியிடம்தெரிவிப்போம்.

தோழிகளெல்லோரும் அல்லியிடம் செல்லுகிறார்கள்.

---

14-வது சீன்.

அல்லிதர்பார் கொலுமண்டபம்.

அல்லிவசனம். சேடியர்காள் என்னசங்கதி.

தோழிகள்வசனம். அம்மணி அந்தத்துஷ்டனுடைய கால்கைகளைக் கயிற்றினால்கட்டி ஆற்றுமணலில் நிறுத்தினோம்,எங்கள்கால்கைகள் எல்லாம்சிவந்து கொப்பளித்ததேயொழிய அவனுக்கு ஒரு துன்பமுமில்லை உல்லாசமாகப் பாடிக்கொண்டுதங்களை எங்கே என்று வினவுகின்றான்.

அல்லிவசனம். செங்கமலம் இது என்ன ஆச்சரியமா யிருக்கின்றது.

இராகம்-இங்கிலீஷ்நோட்-தாளம்-ஏகம்.

சேனைக்கதிபதி செங்கமலமேகம்
சேனைப்படையுடன் நீயே சென்று
சேதித்துடன்வரு வாயே
சீக்கிரந்தூக்கிவிட செய்வதே வீரம்
செய்தியைவந்தென்னிடஞ் செப்புமிக்கோலா
திடவுக் ரமமாய்
யடல்பெற் றிடுவாய்
சின்னபுத்தியுள்ள அந்தப் பயலையே
சின்னாபின்னஞ் செய்யிப்போதே
சேடிகொன்றுவா தப்பாதே (சே)

வசனம். தோழிகாள் இந்நிமிஷமே செல்லுங்கள்.

தோழிகள் வ-ம். அப்படியே செல்லுகிறோம் அரசி

தோழிகள் சென்று ஆற்றுமணலிலிருந்த அருச்சுனனை கூட்டிக்கொண்டு தூக்குமாமிருக்கின்ற இடத்திற்குவருகிறார்கள்.

---

15-வது சீன்.

மதுரைமா நகரைச்சார்ந்த ஓர் ஆரண்யம்.

தூக்குமரம்.

அர்ச்சுனன் வசனம். ஏ பெண்காள் எங்கே என் கண்மணியாகிய அல்லிநாயகி இன்னும் வரக்காணகிலேனே.

தோழிகள் வசனம். பதரவேண்டாம் இதோபாரும் இந்த மரத்தின்மீது ஏறிநில்லும் அல்லிராபகிவந்துவிடுவாள்.

அர்ச்சுனன் வசனம். பெண்மணிகாள் என்ன எல்லோரும் ஒருங்குகூடி இவ்விடம் என்னைக்கூட்டிவந்து இதில் ஏறிநில்லும் என்று சொல்லுகிறீர்களே எனக்குத்தெரியாது எவ்விதம் ஏறவேண்டுமோ அவ்விதம் நீங்கள் செய்துகாண்பித்தால் பின்பு நான் இதில் ஏறுகிறேன்.

தோழிகள் வசனம். என்ன ஐயா ஆண் தகைமையுள்ள பிள்ளையாயிருக்கின்றீர் கேவலம் பேதமைப்பெண்களாகிய நாங்களா காண்பிக்கவேண்டும் இதோபாரும் (என்று)

செங்கமலம் என்னும் சேடியானவள் ஏணியின்மீதேறி பல
கையில்நின்று தூக்குமரத்தின்கயிறை தன்கழுத்தில் மா
ட்டிக்கொண்டு இம்மாதிரிதான் என்று அர்ச்சுனனி
டம் காண்பிக்கின்றாள் அச்சமயம் கிருஷ்ணன்
பெருச்சாளி ரூபங்கொண்டு ஏணியைத்
தட்டிவிடுகின்றார்.

உடன் கயிறு இறுகி செங்கமலம் இறக்கின்றாள் இது
சங்கதிகளை யாவையு முணர்ந்த
அர்ச்சுனன்.

கொஞ்சம் பளுவர்ண அஞ்சுகமே என்ற மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

தூக்கிலிருந்தவள் நாக்குப்பிதுங்கவே
தொங்குகிறாளடி செங்கமலந்தானே
பாக்கிநீயேனுயிர் போக்கிடாமல்
பக்கத்தில் நிற்குறாய் பவளச்சேனை (வினை)

செல்லுவாய் நீ யந்த அல்லியிடமிந்த
செங்கமலஞ் செத்த சிங்காரச்சேதியைச்
சொல்லுவாய் என்னைக்கலந்து
சுகித்திட சோராம லிவ்விடமே வரப்பண்ணுவாய்.

---

மற்றதோழியர்கள் எல்லோரும் செங்கமலத்தை நினைந்
து நினைந்து வருந்தமுற்றுக் கோவென்றலறிக்
கூச்சலிட்டுக்கொண்டு அல்லியிடத் தெரி
விக்க ஓடுகின்றார்கள்.

16-வது சீன்.

## அல்லி தர்பார் கொலுமண்டபம்.

அல்லிவசனம். சேடிகாள் என்ன வருத்தமுற்ற முகத்தோடு வருகின்றீர்கள் அக்கிராதசப்பயலால் உங்களுக்கு என்ன நேரிட்டது செங்கமல மெங்கேகாணோமே எங்கு சென்றாள்.

கருணை கடாக்ஷம் வைத்தென்றனை என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அல்லி யெனு மெங்க ளரசியே என்ன வெண்
றறைகு வோமிப் போது அம்மணி இன்று
அல்லிக்குளத்திலி ருந்த அசடனு
லான தவமானம் அம்மணி
அங்கு நடந்த அப கீர்த்தியதனை
அறைகுவோம் கேளாய் நீ அம்மணி தாசி
செங்கமலந் தாங்கள் செப்பனிட்ட தூக்கால்
சிவலோகஞ் சேர்ந்தா ளென்னம்மணி.

ஐப்தகலந்தரு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இக்தூஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தோழிகள்-செங்கம லமடிந்தாள்
செப்பனிட்ட தூக்க தனில்
தெரியாமல் ருணக வந்து நின்று

அநுபல்லவி.

அல்லி அரிவையா லெந்த விதம்
அதனிற் சிக்கிக் கொண்டாளோ
அறி விப்பீரே விபர மாயிந் நாள்

(தோழிகள்) அம்மா எவ்விதங்கட்டிக்கொள்வதென்றுணவன்.

(அல்லி) அழுகாமல் விபரஞ்சொல்லுவீர்.

(தோழிகள்) அதைக் காட்டிக்கொடுக்கப் போய்த்தானே
பூட்டிக் கொண்டனள்

சேனைக்கதிபதியான செங்கமலம் உயிர் துறந்ததை கேட்டு
அல்லி வருத்தமுற்று ஒருவாறு மனந்
தேறுகிறாள்.

விக்தைமிகு மெங்கள் உன்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

செங்கமல மென்று மங்கையாளவளை யின்று
செத்துமடியச்செய்திட்ட தீயவனை

அநுபல்லவி.

தேவிபெனும் பத்திர காளிக்கிப்பலியிட
சேடியரெல்லோர முமகூடி

சரணங்கள்.

செல்லுவீர் கொல்லுவீர் வெல்லுவீர் சொல்லுமர்
தேர்ந்த மந்திர ஜாலவித்தை
தெரிந்த வன் போற் காணுது(செங்

வசனம். சேடியர்காள் அந்தக்கொடிய வஞ்சகனை காளிகா தேவிகோவிலின் முன்பாகக்கொண்டுபோய் சிறுத்திசென்னியைத் துணித்துப் பலியிட்டு வாருங்கள்.

தாதிகள்வசனம். ஆக்ஞையின்படி செய்து வருகிறோம் அம்மணி.

சேடியர்கள் தூக்குமரத்தின் சமீபமாக நின்றுகொண்டிருந்த அர்ச்சுனனை காளிகாதேவி கோவிலுக்குக்கூட்டிக்கொண்டு செல்லுகிறார்கள்.

கிருஷ்ணன் இவர்கள் வருவதற்குமுன் காளிகாதேவியிடம் வந்து ஆண்பலியாகாது எனச்சொல்லு என்று கூறிச் சென்றுவிடுகிறார்.

---

17-வது சீன்.

காளிகாதேவி கோவில்.

தோழிகள்வசனம். பத்ரகாளி, கங்காளி, சாம்பவி, சாமுண்டி, ஆரணிமாதங்கி, நாரணி, பகவதி, திரிசூலி, சக்ரபாணி, மகமாயீ, எல்லைப்பிடாரி, தாயே இந்த நரபலியை எங்களரசியாணி ஆக்ஞையின்படி கொடுக்கின்றோம் ஏற்றுகொள்ளவேண்டும் அம்மணி ... பதாக நமஸ்கரித்து.

அர்ச்சுனன் தலையைக் கவிழ்க்கும்படிசெய்து தோழிகளில் ஒருவளான பவளச்சேனை வாளை ஓங்குகின்றாள்.

காளிகாதேவி ப்ரசன்ன மாகுதல்.

காளி வசனம். பெண்காள் உங்கள் ராணியாகிய அல்லிக்கு புருஷவாடை யாகாததால் எனக்கும் அவ்விதமே ஆண்பலியாகாது உடனே கூட்டிச்செல்லுங்கள்.

தோழிகள் அர்ச்சுனனை அவ்வாரணியத்தி லிருக்கும்படி செய்துவிட்டு அல்லியிடம் செல்லுகிறார்கள்.

---

18-வது சீன்.

அல்லி தர்பார் கொலுமண்டபம்.

அல்லி வசனம். என்னசங்கதி பலிகொடுத்தாய்விட்டதா.

தோழிகள் வசனம். அம்மணி தங்களுக்கு ஆண்வாடையா காததுபோல் காளிகாதேவிக்கும் ஆண்பலியாகாதெனச்சொல்லு கிறாள்.

அல்லி வசனம். இதென்னடி விச்தையாயிருக்கின்றது.

இாகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மந்திரங்கள்கற்ற மாயக்காரன்தானோ

அநுபல்லவி.

மந்திரிகளே சொல்வேன் தந்திரிகளேகட்ட
வம்பனைக் கொண்டுபோய்க்கொன்று
தின்றுவிடச் செய்வீர்

சரணங்கள்.

அந்தப்பூதங்கள் வாழுங்கிடங்கில்
அப்பாத கன்சாக இப்பொழு
தேபோடு வீரே

அல்லி வசனம். சேடிகாள் அப்பாதகனை பூதக்கிடங்கிற் கொண்டுபோய்ப்போட்டு, பூதங்களுக்கு ஆகாரமாகும்படிசெய்யுங்கள்.

தோழிகள் ஆரண்யத்திலிருந்த அர்ச்சுனனைக் கூட்டிக்கொண்டு பூதக்கிடங்கைகாடிச் செல்லுகிறார்கள்.

தோழிகள் வசனம். அப்படியே செய்கிறோம் அரசி.

19-வது சீன்.

பூதக்கிடங்கு பூதமகாராஜன் சபை.
தோழிகள் அர்ச்சுனனைப் பூதக்கிடங்கில் தள்ளுகிறார்கள்.
அல்லியாலனுப்பிய அர்ச்சுனனை கிருஷ்ணனு
டைய ஆக்ஞைபால் உல்லாசமாகத் தூக்
கிக்கொண்டு பூதங்கள் ஆடலும்பா
டலும் நடக்கின்றது.

இராகம்-டான்ஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

எனைமருவவாரீ நின்பருணைளனைஞழி

அநுபல்லவி.

விந்துவதனமுக சிங்காரனேமகிழ்வுட (எனை)

வந்து மதனை யெங்கள்
மீது, கிருபை செய்யிப்
போது ஒய்யாரா வந்த
தேது கெம்பீரா அதை
யோது காதல் கொண்டோமே
மாது கலங்குதே மனம் (எனை)

அர்ச்சுனனுடைய விமரிசையைப் பார்த்துக்கொண்
டிருந்த தோழிகள் அல்லியிடம் தெரிவி
க்கச் செல்லுகிறார்கள்.

---

20-வது சீன்.

அல்லி தர்பார் கொலுமண்டபம்.

அல்லி வசனம். என்ன சங்கதி அக்கொடிய துஷ்டனை பூதக்கிடங்கில் தள்ளிவிட்டீர்களா.

தோழிகள் வசனம். அம்மணி நாங்களென்ன சொல்லப்போகின்றோம் நாங்கள் அத்துஷ்டனைப் பூதக்கிடங்கில் தள்ளினவுடன் அப்பூதங்கள் ஒவ்வொன்றாக அவனைத் தூக்கிக்கொண்டுபாடி யாடிக் கொண்டு இருக்கிறதுகள்.

அல்லி வசனம். அப்படியா மாந்திரீகத்தில் தேர்ச்சியடைந்தவன் போயிருக்கிறது நல்லது அமருங்கள்.

கிருஷ்ணன் மெல்லிவேடம்பூண்டு அர்ச்
சுனனைத் தேடி வருகின்றார்.

சக்ரா சரசமதலோலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

எந்தன் ஆசை நேசனைக்கா ணேனே இந்த
அங்கம் நொந்துவந் தேனே எஞ்செய்வேன்
அவனிமுழுதுமலைந் தேனே
அனேயே யிங்கு நானே

யான் துவாரகாபுரியில் வாசம் மாம
துரை நகரத் தேசம் பார்த்துநான்
துரிதமேகவுத் தேசம்
துன்பத்தாலிவ் வேஷம் (ஆ)

அல்லி வசனம். தோழிகாள் வெளியேயென்னடி இரைச்சல் யாரோமனம்வருந்தி அழுதுகொண்டிருக்கிறப்போல் தெரிகின்றது மேலும் பெண்குரலாகவும் கேட்கின்றது யாராயிருந்தபோதிலும் சரி அன்னவரை அதிசீக்கிரம் அழைத்துவருவீர்.

கணவனைத் தேடிக்கொண்டுவந்த மெல்லி யென்
பவளை தோழிகள் அல்லியிடம் அழைத்துக்
கொண்டுபோய் விடுகின்றனர்.

அல்லி விசாரிக்கின்றாள்.

வசனம். ஏ மாதே நீயார் இவ்விதம் ஒண்டியாக புலம்பி அழுதுகொண்டு வரவேண்டியகாரணம்யாது உன்பேரென்ன.

மெல்லி வசனம். அம்மணி என்ன என்று கூறுவேன் என்காலகதியை நினைத்துஅழுகின்றேன்.

சோமசேகரனருளும்பாலா வர்ணமெட்டு.

இ-ம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அம்மணி எனதுபேரோ மெல்லி மெல்லி இதை
அறிகுவீரெனதுதங்கை அல்லி அல்லி அம்மா
இம்மண்ணிலென்னை மணந்த பிராண காந்தன் ஏதோ
என்றங்கைமேலாசைகொண்டு விளையும்கைந்தே யான்
என்னசொல்லியுங்கேளாது பாவி பாவி இன்று
எங்குசென்றாரோதெரியேன் மேவி மேவி அதா

வின்னகர்மதுரைநாடி வந்தேன் வந்தேன் வந்து
மிக்குங்காண்கிலேனே மனம் நொந்தேன் நொந்தேன் தாயே
(அம்)

மெல்லி வசனம். அம்மணி நானிருப்பது துவாரகாபுரிஎன்பெயர் மெல்லி என்றங்கைபெயர் அல்லி அவள் என்னைப் பார்க்கிலும் மிக்க சௌந்தரிய முடையவள் என்னை மணஞ்செய்த மணவாளர் என் தங்கைமீது மையல்கொண்டு உன்மத்தம் பிடித்தவர்போல் தண்ணீர்கண்ட விடமெல்லாம் அல்லி அல்லியென்று என்னமோ மருந்தை வைத்து உரைத்துக்கொண்டு திரிந்தார் நான் என்னசொல்லியும் கேட்கவில்லை கடைசியாக இன்ன இடமென்று தெரியவில்லை எங்கேயோ சென்றுவிட்டார் நான் இந்த அவனிமுழுதும் தேடிக்கொண்டு வருகிறேன் இப்பொழுது இம்மதுராபுரியிலிருப்பதாகக் கேள்வியுற்று இவ்விடம் வந்தேனம்மா.

அல்லி வசனம் அப்படியா.

இராகம்-பார்ஸி-தாளம்-சாப்பு.

என்றன் நாமத்தை யன்று
ஏனோபு கன்று வென்று
உன்னுயகனை யின்று
உடனுயி ரொழித்திடும்பூதக்
கிடங்கினிற் போடச்சொன்னேன்
ஓடியழைத்துப் போவாய்
நாடிப் பிழைத்துப் போவாய்
செல் செல் செல் செல் (என்)

வசனம். ஏ பெண்ணே என் நாமத்தை வகித்த வேறு பெண்கள் இந்நீணிலத்திலிருப்பதாக இதுவரை நான் கேள்வியுற்றதே கிடையாது நம்மைத்தான் அவன்நினைத்துக்கொண்டு அலைகிறானென்பதாக நினைத்து அவனை அநேக இம்சைகளெல்லாம்செய்து பின்பூதக்கிடங்கிற் றள்ளும்படி செய்திருக்கிறேன் நீ தடையின்றியழைத்துச்செல்லலாம்.

அல்லி வசனம். அடி பவளச்சேனை பூதக்கிடங்கிற் றள்ளினபித்தனை அக்கிடங்கினின்றும் விடுதலைசெய்து வருவாய்.

*அர்ச்சுனன் பூதக்கிடங்கினின்றும் வெளியில் நீங்கி கிருஷ்ணன் சயனித்திருக்குமிடம் நோக்கி வருகிறான் மெல்லிவேடம் பூண்ட கிருஷ்ணன் அல்லியிடம் விடைபெற்றுக் கொண்டு தான் சயனித்திருந்த இடத்திற்கு அர்ச்சுனன் வருவதற்கு முன்வந்து நித்திரை செய்து கொண்டிருக்கிறார்.*

---

21-வது சீன்.

*மதுரை நகரின் ஓர்பாகம்.*

*கிருஷ்ணன் கல்லினமேல் சென்னியை வைத்து நித்திரை செய்தல்.*

*அர்ச்சுனன் வசனம்.* அத்தான் இன்னும் நித்திரை நீங்கவில்லையோ அத்தான் (என்று எழுப்புகின்றான்.)

*கிருஷ்ணன் நித்திரை நீங்கி எழுந்திருப்பதுபோல எழுந்திருக்கின்றார்.*

*கிருஷ்ணன் வசனம்.* அர்ச்சுனா நான் சயனித்து எழுந்திருக்க மிக நாழிகை யாகிவிட்டதுபோலிருக்கிறதே இருக்கட்டும் இப்பொழுது யான் என்னென்னமோ பலவிதமான கனவுகளெல்லாங் கண்டேன்.

*அர்ச்சுனன் வசனம்.* அத்தான் என்னகனவு கண்டீர்கள்.

கிருஷ்ணன்.

பீதாம்பர பங்கஜ ப்ராணதார்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பற்குணனே யிதோ பகருவேனே மிக்க
பரிவுடன் கண்ட கனவதை நான் (பற்)

அநுபல்லவி.

விற்கானே நீவன வழிசெல்லும் போது
விரைவுடனே வந்தாளோர் குறமாது
விந்தைக் குளிகை மூன்றை கொடுத்தாளப் போது
வேண்டியல்லிக்குளத்தி னுரைத்தாயப்போது (பற்)
சேடியர்பார்த்து அல்லிச் செல்விக்குக் கூற
செப்பனிட்டாள் சுமெணவினிற் றேற

சிவிர்த்திடவே புன்னகைத்திகைத்திட தீர
சிக்கிர முடனுனைத் தூக்கினிவிட வீர (பற்)

அல்லியு மிவ்விதமா யறைந்தாளே கோக
அந்தச்சேயிழை செங்க மலமங்கைசாக
அம்பிகை காளிதனக் கே பலியாக
அடலுடன் செய்வது முடி யாதே போக (பற்)

தந்திர ஜாலவித்தை யறிந்தவன் தானோ
தன்மையையாமறியோ மென்றுவந்தானோ
சவ்வனே யில்விதமாய்ப் படைத்தார்களோ
சதிசெய் பூதக்கிடங்கி லடைந்தார் மெய்தானோ (பற்)

அர்ச்சுனன் வசனம். அத்தான் தாங்கள் தூங்கும்பொழுது பித்தம் ஜாஸ்தியா யிருக்கலாம் அதனால் இக்கனவு கண்டிருக்கிறீர்கள்.

கிருஷ்ணன் வசனம். காண்டீபா அப்படியு மிருக்குமோ இருக்கலாம் இருக்கட்டும் உன்னுடைய நல்ல ஆடைகளும் ஆபரணங்களு மெங்கே.

அர்ச்சுனன் வசனம். கோபாலா உண்மையைச் சொல்லிவிடுகிறேன் தாங்கள் கனவுகண்டதுபோலவே அனுபவித்தேன் எப்படியெனில் தாங்கள் நித்திரையிலிருக்கும்போது அல்லியினுடைய ஆசையால் இன்னொருதரம் தடாகத்தைச் சுற்றிப்பார்த்து வரலாமென்று என் தொடைமேல் வைத்திருந்த உங்கள் சிரசைத் தூக்கி ஒரு பாராங்கல்லின்மேல் வைத்துவிட்டு சென்றேன் வழியில்ஒருகுறமாது குறிசொல்வதாகவந்து நான் நினைத்த சங்கதியை முழுவதும் தெரிவித்தனள் அன்றியும் மூன்று மாத்திரைகளையும் கொடுத்து இதை இத்தடாகக்கரையிலுரைத்தால் அல்லி கைவசமாவாள் என்றுசொல்லி என்னுடைய ஆடையாபரணங்களெல்லாம் பறித்துக் கொண்டாள் அவள் சொன்னபடி பலிக்கவில்லை யாதொரு பயனும் பெறுது மோசம்போனேன் கோபாலா.

கிருஷ்ணன் வசனம். அப்படியாசங்கதி மோசம்போய்விட்டாயா ஆனாலக்குறத்தி யிருக்குமிடம் தெரியுமா.

அர்ச்சுனன் வசனம். தெரியும் இம்மருந்து பலிதமாகாவிடில் இந்த ஆடையாபரணங்களை திரும்பக்கொடுத்து விடுகிறேனென்று அவள் முன்னமே யென்னிடம் சொல்லிப்போனாள்.

கிருஷ்ணன் அப்படியானால் உடனேசென்று வாங்கிவா சீக்கிரம்.

அர்ச்சுனன். குறத்தியிடம் ஆடையாபரணங்களை வாங்கச் செல்கின்றான்.

கிருஷ்ணன் குறத்திவேடம் பூண்டு அர்ச்சுனனிடம்
போய் ஆடையாபரணங்களை கொடுத்துவிட்டு
திரும்பவந்து விடுகின்றார்.

அர்ச்சுனன் வசனம். அத்தான் இதோ எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன்.

கிருஷ்ணன் வசனம். சந்தோஷம் அர்ச்சுனா இப்படி அமருவாய்.

அர்ச்சுனன் விருத்தம்.

மாதவாதொண்டர்தம்மை மகிழ்வுடன்கார்த்தமாயா
தீதிலாகுணமேயுற்ற சேயிழையல்லிமாதை
நீதமாயெந்தனுக்கே நீர்மணஞ்செய்விராகிற்
பாததாமரையையென்றும் பணிவுடன்பணிகுவேனே.

கிருஷ்ணன் வசனம். அர்ச்சுனா உனக்கு இந்த நினைவாகயிருக்கிறது ஆனால் நான் ஒன்றுசொல்லுகிறேன் கேள் நீ நினைத்திருக்கிற அல்லிநாயகி பாம்பைக்கண்டால் அவளுக் கதிகபிரியமாகையால் நீ பாம்பு வடிவமெடுத்துக்கொள் நான் பாம்புப்பிடாரனாகி உன்னைக்கொண்டுபோய் அந்த அல்லியிடம் சேர்க்கின்றேன் நீ போய் வேண்டிய விஷயங்களை முடித்துக்கொண்டு வந்துவிடு.

---

22-வது சீன்.

மதுரைமாநகர் இராஜவீதி.

கிருஷ்ணன்பிடாரனாகி அர்ச்சுனனைப்பாம்பாக்கு
ஆட்டிக்கொண் டிருக்கின்றார்.

மாக்ருதகரியாம் என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

| | | |
|---|---|---|
| ஆடுபாம்பே நீ | ஆடுபாம்பே நீ | அரன் |
| அடியிணை | கண்டோ மென்றிப் | |
| படிதனி | லின்று மெகிழ | (ஆடு) |

அநுபல்லவி.

நீடுபத நமக்கென்று நெஞ்சந்தனிலேபுகழ்ந்து
நித்தியமென்றே பாத்தை முத்தியென்றுமேமனினைந்து
நேர்ந்துவல்ல லடிவணங்கியே
ஓர்ந்து உள்ள படியொடுங்கியே
தேர்ந்து யெந்த னுடனிணங்கியே(ஆடு)

அல்லிக்குப்பாற்குடம் கொண்டுபோகுந்தோழியர்கள் வழியில் ஆடிக்கொண்டிருக்கும்பாம்பின் அழகை க்கண்டு பாற்குடங்களை கீழேயிறக்கிவைத்து விட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

கிருஷ்ணனுடைய மாய்கையால் குடங்களிலுள்ள பாலை யெல்லாம் பாம்பு குடித்துவிடுகின்றது இதைக் கண்டதோழியர்கள் கூவென்றலறிக் கொண்டு அல்லியிட முறையி டச்செல்லுகிறார்கள்.

---

23-வது சீன்.

அல்லிதர்பார் கொலுமண்டபம்.

அல்லி வசனம். தோழியர்காள் என்ன இவ்வாறு அழுதுகொண்டு வருகிறீர்கள் காரணம்யாது.

தோழிகள் வசனம். அம்மணி நாங்கள் பாற்குடம் கொண்டு வரும்பொழுது வழியில் ஓர்பாம்புபிடாரன் பாம்பை ஆட்டிக்கொண்டிருந்தான் அப்பாம்பு ஆடுகிறதைக்கண்ட நாங்கள் குடங்களை கீழேயிறக்கிவைத்துவிட்டு வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்தோம்குடங்களிலுள்ள பாலையெல்லாம் அப்பாம்புகுடித்துவிட்டது நாங்களினி எவ்விதம் பிழைக்கப்போகின்றோம் தாயே.

அல்லி விருத்தம்.

பாங்கிகாளழுகவேண்டாம் பாற்குடம்போனதென்று
ஆங்கது ஆடும்பாம்பு அழகுள்ளதானதாலே
ஈங்குயான்காணவேண்டு மின்றுநீர்பிடாரன்னனைப்
பாங்குடன்கண்டுசொல்லிப் பரிவுடனழைத்துவாரீர்.

தோழிகள் வசனம். அம்மணி ஆக்ஞைபின்படி அழைத்து வருகின்றோம்.

அல்லி ஆக்ஞையின்படி சேடியரழைத்துவந்த
பிடாரன் பாம்பை ஆட்டுகின்றான்.

ஆடியபாம்பின் அழகைக்கண்ட அல்லி அப்பாம்பின்
மீது அவாவுற்றவளாய் பிடாரனிடம் பாம்பை
விலைக்குக் கேட்கின்றாள்.

என்ன விலைவேண்டுமிதற்கு என்ற வர்ணமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அல்லி. யாது விலை வேண்டுமோகூறாய் பாம்புப்பிடாரா
யாது விலை வேண்டுமோகூறாய்
நீதிலா திவ்வளவேண
ஓதுவா யிதற் கிப்போது

பல்லவி.

பிடாரன். ஏதும் விலை வேண்டானம்மணி எந்தன்பாம்பிற்கு
ஏதும் விலை வேண்டானம்மணி
மாதே யென்றங் கையெந்நாளு
மீதனைப்பா ராமலிராள் (ஏது)

அநுபல்லவி.

அல்லி. தக்கவிலை சொன்னு னுன்றன்
தங்கையொன்றும் சொல்லளடா
தன்மையாய் மிக்க வேவிலை
நன்மையாய் வாங்கி நீ செல்வாய் (யாது)

அநுபல்லவி.

பிடாரன். நங்கை யென் றங்கையிதனை
எங்கு மோடிப் போய்விடாமல்
இங்கிதமாய்ச் சேர்ந்திதோடு
இன்பவிலை யோடிருப்பாள் (ஏது)

சரணங்கள்.

அல்லி. இன்றுவோர் பொழுதிற்காவதுஇதிருக்கட்டும்
இன்றுவோர்பொழுதிற் காவது
சென்று வரு வாயுன்னில்லம்
க்ஷேமமாய்ப்பா ம்புப்பிடாரா
சிந்தனை செய்யாது நாளை
வந்து பாம்பைக்கொண்டு போவாய்

சரணங்கள்.

பிடாரன். சோதரியைக் காணுவிடிலோ சோர்ந்துயிளைக்கும்
மாதர்களைக்கண்டா லோஎன்
சோதரியோவெனப் பார்க்கும்
வேதமிலாச் சங்கீதத்தில்
பேதமிலாற் றேர்ந்திருக்கும்

அல்லி வசனம். பாம்புப்பிடாரா அப்படி இளைத்துப்போனால் குறைந்த இடைக்கு ரத்தினங்களை நிறுத்தித் தருகிறேன் அப்படி யொன்றும் நீ எண்ணவேண்டாம் இளைத்துப் போகாமலிருக்கும்படி பால் கற்கண்டு மிக்கருசிகரமான பலவகை மிட்டாய்முதலியவைகளை இதற்கு ஆகாரமாய்க்கொடுப்பேன் நீ வெவ்வேறு நினைவுகொள்ளவேண்டாம்.

பிடாரன் வசனம். அம்மணி இப்பாம்பை என்சகோதரி உத்திரவில்லாதபடி யான்வேறொருவருக்குங் கொடுப்பதேயில்லை தாங்கள் அரசியாக யிருப்பதினால் தங்களினுக்ஞையை மீறக்கூடாதவனா யிருக்கிறேன் போய்நாளைவருகிறேன் இடைகுறையா திருக்கவேண்டும் அப்படிகுறைந்தால் தங்களுத்திரவுப்படிகுறைந்தயிடைக்கு ரத்தினங்களை நிறுத்துக் கொடுக்கவேண்டும் சென்றுவருகிறேன்.

அல்லி வசனம். அப்பா அவ்விதமே சென்றுவருவாய்.

கிருஷ்ணனை பாம்புபிடாரன் பாம்பை நிறுத்துப் பார்த்து அல்லியிடம் கொடுத்துவிட்டுச் செல்கிறான்.

---

24-வது சீன்.

அல்லி சயனக்ரஹம்.

அல்லி கொஞ்சநேரம் சர்ப்பத்தோடு விளையாடிக்கொண் டிருந்தபின்பு சயனித்துக்கொள்ளுகிறாள்.

அர்ச்சுனன் கிருஷ்ணனுடைய உதவியினால் சுயரூபமுண்டாகி அல்லிநாயகியைப்பார்த்து வர்ணிக்கின்றான்.

தரு.

இராகம்-கலியாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

இவளை சிறந்த வுருவம் இப்புவிதனிலுக்
கிசைந்த யௌவன பருவம் (இ)

அநுபல்லவி.

தவராஜ யோகிகளுக் தனதடிபணிசெயத்
தகுந்த செயலது புகுந்தவமாறும்
வருந்து மெழிலது பொருந்தி யுறங்கிடும்(இவ)

சரணம்.

இருளுற்றிடவதி குளிருற்றுலவிய
கிரணத்தொகுதிக ளுளகற்சகிசிச
ராகும்வதன வொப்புக்
கருமைக்குரியமெய் கடுமூக்கியகணை
வடிவுக்கெதிரொரு லகுவிற்குவிலகி
யேகும் தனங்களி ரண்டும்
மத்தகத்தை வெற்பைமுட்டிக்
குத்தியெட்டி மிக்கத்தட்டி
கத்திவிட்ட திக்கிரமித்து
சித்தமுற்ற தொத்தலையும்
பூணும் அதனைக் கண்டு
சித்தசதரு நட்டமிட்ட
வுத்தமற்று ரித்தெடுத்து
முப்புரத்தை வெற்றிபெற்ற
கச்சிலைப்ப யமடைந்து
தோணும் என்றுவி னிமேல்
செப்பவு மெப்பவு மொப்பொருள்
பெற்றதோ முப்புவனப்படை
அப்பிரமன் கற்றதோ மூரிவெஞ்சிலை
மாரனின் ரதியென கேருகந்திடும்நாரி(இவ)

விருத்தம்.

நாவாரச்சொல்லிதுதித்திடுவேன்களினபொற்பதத்தை
தேவாவுனக்கேனிந்தவஞ்சகமேன்பொல்லாப்பழியேன்
போவாரைக்கண்டெதிர்த்தாரைக்குத்துமிவள்குடத்தனங்கள்
வாவாவென்றழைக்குதையோபொல்லாவஞ்சகியே.

பூமிமெச்சிடும் என்ற வர்ணமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்கை யல்லி யெனு நங்கையே என் மனம்
வாடுதே உனைத் தேடுதே சோ நாடுதே (அந்த)

மாரனம் புவந்து சிறியங்கமதிற்
பாயுதே உடல் தியுதே (மன்

சுந்தரிஎனைக்க லந்தணையயிங்கு
வாராயோ முத்தந்தாராயோ எனைச்சேராயோ எந்தன்
சோகந்தீர்க்கயினி தாகவுன்றன்மனம்
வல்லையோ மன மில்லையோ (மன்)

பாரியாக்கமணந்தேதரினேனே செழும்
பாவையே சொர்னபூவையே செய்வேன் சேவையேநேற்று
பாம்புவேடங்கொண்டு வீம்பாய்வந்த என்னைப்
பார்ப்பையே காதல் தீர்ப்பையே (மன்)

அர்ச்சுனன் வசனம். ஆஹா இவளுடைய சௌந்தரியத்தை என்னென்று சொல்லுவேன் நல்லதிருக்கட்டும் இவளோடு இப்பொழுது சேரலாமா விழித்துக்கொள்வாளாகில் என்ன கதியாகுமோ தெரியவில்லையே ஆயினும் பார்ப்போம்.

அர்ச்சுனன் அல்லியோடு சேருகிறான்.

கிருஷ்ணன் மாய்கையால் அதிகன்றாக நித்திரை செய்கின்றாள்.

அர்ச்சுனன்.

இராகம்-பார்ஸி-தாளம்-ஏகம்.

நித்திரைமயக்கமோ அல்லி
நீயெனைப் புல்லி
சேருஞ்சு கந்தாடி எந்தனிரு
தோளுங்க லந்தாடி
நினக்கும் காமம்
எனக்கும் காமம்
கோரய் வாராய்
நிசியுமேருதே
நேர்ந்தஈதேநல்லகாலம் நேரமாகமானே
நீண்டபோகந்தானே நிறுத்திசெய்வேன்நானே
நீதிதானே மானே

அர்ச்சுனன் அல்லியைச்சேர்ந்தபின் முன்போல சர்ப்ப உருவங்கொண்டு சயனித்துக் கொள்ளுகிறான்.

பொழுதுவிடிந்து அதிகநாழிகையாக அல்லிநித்திரை செய்துகொண்டிருப்பதைப் பார்த்து தோழியர்கள் எழுப்புகின்றனர்.

பொழுதுவிடிந்தது தாயே என்ற வர்ணமெட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தோழிகள். விடிந்ததெழுந்திரு தாயே பொழுது
விடிந்ததெழுந்திரு தாயே அம்மா
விளம்பினேனும் நித்திரை
நீக்கிடு வாயே (விடி)
திடமதுமிகுந்த தெரிவையேகேளாய்
தினகரனுதயமாய்த் திங்களுமறைந்து (விடி)

அல்லி. வேசரிபோலவி சைக்குறீர் நீங்கள்
வேசரிபோலவி சைக்குறீர் இன்று
வேலைக ளில்லையோடி
காலையிற் போங்களடி (வேச)
கூசாமலோரிபோற் கூடிஎல்லோரும்
கொஞ்சமுமஞ்சாம லெந்தன்முன்வந்தது (வேச)

தோழிகள். மதிகஞ்சம்போலுற்ற முகமே நல்ல
மதிகஞ்சம்போலுற்ற முகமே இன்று
மாறியி ருக்கவது
காரண மென்தகமை (மதி)
நிதியுமிகக்கலந்து பொதிந்தகுழல்கலைந்து
நேர்ந்தவிஷயமதை ஓர்ந்துஉரைப்பீரென்று (மதி)

அல்லி. தோழிகாள் நேற்றையக்காலே எந்தன்
தோழிகாள் நேற்றையக்காலே இம்மா
சுணங்கொண்டு வந்தவன்
சொன்னது போலே (தோ)
நாழிகை சென்று நானுறங்கிய பின்னே
நங்கையிக்கோலம் நாகஞ்செய்ததோமேலும் (தோ)

வசனம். தோழிகாள் இச்சர்பத்தினுடைய விபரீதத்தை என்னென்று கூறுவேன் இதனோடு சந்தோஷத்துடன் அதிக நாழிகை

வரையிலேயாடிக் கொண்டிருந்தேன் நித்திரை செய்வதற்குநேரோ மிகையாய்விட்டதுஅயர்வினால் என்னுடையஆடையாபரணமுதலா னதுகளெல்லாம் நிலைகுலைந்திருக்கின்றதோ அல்லது பாம்புப்பிடா ரன் கூறினபடி அவனுடைய தங்கையென்றுநினைத்து இப்பாம்பான து நான் உறங்கும்பொழுது என்மேல்வந்து விளையாடிக்கொண்டிரு ந்ததோ என்னமோ ஒன்றுந்தெரியவில்லை.

பாம்புப்பிடாரன் வருகின்றான்.

பிடாரன் வசனம். தாயே நேற்றையதினம் இப்பாம்பை என் சகோதரியிடம் கொண்டுபோகாததால் அதிகமான வருத்தப்பட்டு க்கொண்டாள் நான் செல்லவேண்டும் பாம்பை நிறுத்துக்கொடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பாம்புப்பிடாரன் பாம்பை நிறுந்து குறைந்த இடைக்கு இரத்தினங்கள் வாங்கிக்கொண்டு செல்லுகிறான்.

---

25-வது சீன்.

மதுரை நகரில் ஓர் வீதி.

அர்ச்சுனனும்—கோபால கிருஷ்ணனும்.

கிருஷ்ணன் வசனம். அர்ச்சுனா! என்ன இராத்திரி எந்தவித ம் நடந்தது சந்தோஷந்தானே இனிமேலாவது நம்முடைய நகர்க் குப் புரப்படலாமல்லவோ.

அர்ச்சுனன் வசனம். கோபாலா! உம்முடைய மாயாவினோத ங்களை யான் எந்தவிதம் உரைப்பேன் தங்கள் கிருபாகடாட்சத்தா ல் அல்லிநாயகியைச் சேர்ந்து நல்ல இன்ப சுகத்தை யடைந்தேன் அன்னவளைக் கலியாணஞ்செய்யாமல் எவ்விதம் வருவது.

தங்கு மாசேதும் ரெகுவானு என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மணமாலை சூட்டிவைத்திடும் மாதவாயினி(மண)

அநுபல்லவி.

மேலோர்க்கருளுந்திட மேலாவசோதையருள்
பாலா கோபாலா அல்லி பாவைதன்னையானணைய
மாமணஞ் செய்தால் மற வாமலுன்பாதமதை
நேமமுடனேபணி வேனேவாமனனேமண(வா)

கிருஷ்ணன் வசனம். காண்டீபா உந்தனுக்காக இன்னும் ஒரு தொழில் செய்கிறேன் என்னவெனில்மறுபடியும் இன்னும் சிலவில ங்கினங்களையேவி பயிர்முதலானவைகளை யழித்து நாசஞ்செய்யும் படிசெய்கிறேன் அதைக்குடிகளாற் கேள்வியுற்று அல்லி வேட்டை க்குவருவாள் அவளுக்கு மிக்கதாகவிடாயை யுண்டாக்குறேன் அப் பொழுது அவள் களையோடுவருகும் வழியில் நான் ஒரு பிராமணப் பெண்போலவும் நீ ஒரு விருத்தாப்பியமுள்ள பிராமணனுகவும் வே டம்பூண்டு தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தண்ணீர் ஊற்றுவோம் அ வள் தண்ணீராருந்தியவுடன் சந்தோஷங்கொண்டு நம்மிருவரையும் அவர்களுடன் அரண்மனைக்கு அழைத்துப்போவாள்பின்புசரியான சமயம்பார்த்து விவாகத்தை முடித்துவிடுவோம்.

அர்ச்சுனன். வசனம். கோபாலா எந்த காரணத்தைக்கொண் டாவது அவளுடைய கழுத்தில் என்கரத்தினுல் தாலிகட்டி முடித் தால்சரி.

அர்ச்சுனனும் கிருஷ்ணனும் அல்லிவேட்டையாடும்
படியான ஆரண்யத்திற்குத் தண்ணீர்ப்பந்தல்
வைக்கச் சொல்லுகிறார்கள்.

காட்டில்வாழ் விலங்கினங்கள் பயிர்முதலானவைகளத்த
னையும் அழிப்பதை குடிகளாற் கேள்வியுற்று
அல்லி தன் சேடியர் முதலானவர்களுடன்
வந்து வேட்டையாடுகின்றாள்.

---

25-வது சீன்.

ஆரண்யம் அல்லிவேட்டை.

இராகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

கோதண்டந்தன்னிலோர் "கோடிகணைப்பூட்டி வெகு
கோட்டி விந்தங் காட்டி லுற்ற
குஞ்சரஞ் சிங்கக்கொடு வரியினுயிர்வாட்டி

அநுபல்லவி.

சூதடி பிந்தமான் றுள்ளிப்பதுக்குது
தோழியரேயோடி வாருங்களிப் போது
காதவழி தூரங் காட்டிவளை யுது

கக்கரத்த மிக்கணமே
பக்குவமா யுக்ரமித்துக்(கோ)

சரணங்கள்.

சென்னலழித்துமே சென்றமனைகளைத்தானே இன்று
நானே வதைப் பேனே பாரீர்
சிக்கிரமேபுலி சென்னியைக் கொய்திடுவேனே
நன்னயமாயவே நாமொன்றாகூடியே
நாடிவிலங்கினை நன்றாகத்தேடியே
கட்டுக்கனை விட்டுபபலி
யிட்டுப்பொடி பட்டுக்கெட (கோ)

வசனம். அடி பவளச்சேரு! யான் வேட்டைகளாடிய களைப் பின்மிகுதியால் தாகமானது அதிகரிக்கின்றது சமீபமாக தடாகங் களொன்றையுங் காணேமே.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தாகமாகுதே பிராணன்போகுதே
ஏகமாயடர்ந்தகானி லெங்குஞ்சுற்றியதாலிதே (தா)

தாகவிடாய் தணிப்பதற்கு
தண்ணீர்ப்பந்தல் தோற்றுதடி
தாதியரே சென்றுநீங்கள்
தண்ணீர்கொண்டு வாங்களடி
ஜாதிபேருரறிந்து வருவீர்
சங்கதிவிபரங் தெரிகுவீர்
இங்கிதைவந்து கழறுவீர் (தா)

வசனம். தோழியர்காள் இதோ சமீபத்தில்யாரோ தண்ணீர்ப் பந்தல் வைத்துக்கொண்டிருப்பதுபோல் தோனுகின்றதே தவிபரமா ய்விசாரியுங்கள்.

---

27-வது சீன்.

தண்ணீர்ப் பந்தல்.

கிருஷ்ணவேணி பார்த்தலிங்கேஸ்வரஐயர்.

அல்லி தோழியர்கள் தண்ணீர்ப்பந்தலிற்போய் தண்ணீர் வாங்கிக்கொண்டு இவர்களை யாரென விசாரிக்கு மளவில் அவர்கள் யோகவே இவர்களுடன் அல்லியிடம் வருகிறார்கள்.

தோழிகள் தண்ணீரைக் கொடுத்த அல்லி தாகவிடா
ய் தீர்த்தபின் தண்ணீர்ப் பந்தற்காரரை யாரென
விசாரிக்கின்றாள்.

அல்லி வசனம். நீங்கள்தான் தண்ணீர்ப்பந்தற் காரர்களோ ஆ கா யான்களைப்புடன்வந்த என்தாகவிடாயை தவிர்த்த தர்மசீலரே செய்யாமற்செய்த வுதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிதுஎன் றநீ திக்கிணங்க உங்களுக்கு நன்றியைப் பாராட்டக் கடமை பூண்டிருக்கிறேன் ஆனால் நீங்களிருப்பது எவ்வூர் உங்களின்பெயரென்ன என்ன விஷயத்திற்காக இவ்விடம்காலங்கழிக்கிறீர்கள் முதலியவைகளை எனக்கு விபரமாகத் தெரிவிக்கவேண்டும்.

கிருஷ்ணன் வசனம். அம்மணி எங்களுக்கு வாசஸ்தானம் இந்திரபுரி என்னுடைய நாமதேயம் கிருஷ்ணவேணி எனது நாயகர் இவருடையநாமதேயம் வார்த்தலிங்கேஸ்வர ஐயர் எங்களுக்கு ஓர் புத்திரனில்லாத பாக்கியத்தால் எங்களுடைய பாபங்கள் நசித்துப் போகும்பொருட்டு காசிமுதலான க்ஷேத்ரயாத்திரை செய்து வருகின்றோம் இந்தத் தண்ணீர்ப்பந்தல்தருமம் எங்கள்குல குருவினது ஆக்ஞை வேறொன்றும் விசேஷமில்லையம்மா.

அல்லி வசனம். அம்மா தங்கள் நாயகரோடு எனதரண்மனைக்குவந்து சிறிதுநாளிருந்து அப்பால் தங்கள் நகரம் செல்லலாமே.

கிருஷ்ணன வசனம். ஆஹா ஹா மிக்க சந்தோஷம்ஆக்ஞையின்படி வருகின்றோமம்மா.

அல்லி முதலானவர்களோடு இவர்களும் அரண்மனை
சென்று சுகமாக வசித்துவருகிறார்கள்.

---

28-வது சீன்.

அல்லி அரண்மனை.

பிராமணப்பெண் வேடங்கொண்ட கிருஷ்ணன் ஒருநாள் அல்லியிடம் தாயே இன்று எங்களுக்கு இலக்குமிநோன்பு அந்நோன்பைக் கொண்டாடுவதற்கு கலியாணக் கிரிகைகளுக்கு உண்டான சாமான்கள் என்னென்ன வேண்டுமோ அவை முழுவதும் வேண்டுமென்று கேட்க அல்லி அவ்விதமே தருவித்துக் கொடுக்க அல்லி சபையிலே யேகலியாணக்கிரிகைகளை யெல்லாம்நடாத்திதாலிகட்ட

வேண்டியசமயத்தில் சபையிலிருந்த அனைவோர்க்கும் கிருஷ்ணன் மாய்கையால் நித்திரையை யுண்டாக்கி விடுகின்றார்.

கிருஷ்ணன் வசனம். காண்டீபா பார்த்தனையா எல்லோரையும் உறங்கும்படி செய்துவிட்டேன் இதுதான் நல்லசமையம் இதோ பார் உன்பிதாவினிடமிருந்து திருமாங்கல்யம் வரவழைத் திருக்கின்றேன் இப்படிவா இதை அல்லிகழுத்தில் கட்டிவிடு.

அர்ச்சுனன் வசனம். அத்தான் நல்ல தந்திரம்செய்தீர் தங்களுடைய உபகாரத்திற்கு யாது உதவிபுரிகுவேன்.

அர்ச்சுனன் அல்லிகழுத்தில் மாங்கல்யம் தரிக்கின்றான்.

காசி என்ற வர்ணமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாலிகழுத்தில் கட்டுகிறேன் தையலேஇந்த

அநுபல்லவி.

சீலமதாயெந்தன் மைத்துனன் வின்ன
தேரில்எல்லோருமு றங்குறார் மெல்ல
கோலமதாயிவ ளாசையே கொள்ள
கோரிவந்தேன் விரை வாகவே கள்ளத் (தா)

வசனம். கோபாலா ஆக்ஞைப்பிரகாரம் கட்டிவிட்டேன் இவள்விழித்தவுடன் இத்தாலியை அறுத்தெறிந்தாளாகில் என்ன செய்கிறது.

கிருஷ்ணன் வசனம். அர்ச்சுனா இவள் எந்தவிதமான ஆயுதங்களினால் துண்டித்தாலும் அறுபடாதிருக்கும்படியாகச் சாயங்கொடுத்திருக்கின்றேன் இவளுடைய விருதுகொடிகள் முதலானவைகளை அறுத்துவிட்டு நம் நகர்க்குச் செல்லலாம் புறப்படு இனி அரைட்சணம் இங்கிருக்கக் கூடாது.

அர்ச்சுனன் வசனம். அத்தான் அப்படியே புரப்படலாம்.

கிருஷ்ணனும் அர்ச்சுனனும் அல்லியின் விருதுகொடி முதலானவைகளை அறுத்தெறிந்துவிட்டு இந்த்ரப்பிரஸ்தம் செல்கின்றனர்.

அல்லி நித்திரை தெளிந்தெழுந்தவுடன் தன் கழுத்தில் தாலி இருக்கின்றதைப்பார்த்து கோபங்கொண்டு நின்றாள்.

இராகம்-பார்ஸி-தாளம்-ஏகம்.

பல்லவி.

யாரிங்கு வந்தவன் அச்சம்
யாது மில்லாது விரோதமாய் அடா (யாரி)

அநுபல்லவி.

யாரிங்கு வந்தவன் கூறுங்களிங்கனம்
பாருங்கள் துட்டனைச் சீருங்கள் கட்டனை-பேசி
நேராயெனைக்கிட்டித் தாலியே கட்டிப்
போரான் விருதறுத்துங் கேலியே செய்த
தாரோவிடுவேனொரு வாளியே அந்தச்
சண்டாளன் றன்னை யிப்போ
கண்டாலிரண்டு துண்டாக்குவேன் எனை
பெண்டாக்கவே நினைந்த மட்டி (யாரி)

அல்லி வசனம். அடிதோழியர்காள் நீங்களெல்லாம எங்கு சென்றிருந்தீர்கள் அடி இங்குபாருங்களடி என்கழுத்தில் எந்தத்திருட்டுப்பயலோ தாலியைக்கட்டிவிட்டு ஓடிவிட்டான். கொடிவிருதுகளெல்லாம் அறுந்து கீழேகிடக்கின்றது அல்லியென்றால் இவ்வீரேழு புவனங்களும் கிடுகிடெனநடுங்கும் இப்பொழுது இப்பேர்ப்பட்ட விஷயங்களை செய்யத்துணிந்தவன் எவனோ தெரியவில்லையே ஆ! ஆ! ஆ! அடி எங்கே பிராமணத்தியையும் பிராமணக்கிழவனையும் காணோமே ஓ! ஓ! அவர்கள்தான் இவ்விஷயங்களை செய்திருக்கவேண்டும் அடிபாங்கிகாள் அவர்களைத்தேடிப்பிடித்துச் சீக்கிரம் கொண்டுவாருங்கள்.

தோழிகள் பிராமணத்தியையும் பிராமணக் கிழவனையும்
தேடிக்கண்டு பிடிக்கச் செல்லுகிறார்கள்.
அல்லி தன்னுடைய கொடி விருதுமுதலானவைகள் அறுந்து போனதைப்பற்றியும் கழுத்தில் இருக்கின்ற மாங்கல்யத்தை வாளாலறுத்து அறுபடாததினாலும் அல்லி மனதில் நினைத்து
வருத்த முறுகின்றாள்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இதுவென்னகாலம் எவர்செய்தகோலம்
எவர்செய்த ஜாலம் இது அலங்கோலம் (இ)

சுந்தரியேமீனாக்ஷி சுகமானவுன்றன்காக்ஷி
சுகமானவுன்றன்காக்ஷி ஆதிக்கவருள்காமாக்ஷி (இ)

எந்தன் கண்டமதிலே ஏதோ பெரியதாலி
ஏதோ பெரியதாலி இருகக்கட்டினான் கேலி (இ)

கொடிவிருதமுத்தானே கோதையினியேதுசெய்வேன்
கோதையினியேதுசெய்வேன் மேதினியிலெவ்வாறு
[ய்வேன் (இ)

தோழிகள் வசனம். தாயே நம்முடைய நகர் முழுவதையுஞ் சுற்றித்தேடிப்பார்த்தோம் அப்பிராமணத்தியையும் கிழவனையும் எவ்விடத்திலும் காணவில்லை.

அல்லிநாயகி இன்றுவரை நடந்தசங்கதிகளை யெல்லாம் தன்தந்தையர்களான பாண்டியர்களிடம் தெரிவிக்க அவர்கள் இது அரசர்களுடைய செய்கையாகத்தான் இருக்கலாம் என்று ஐம்பத்தைந்து தேசத்தரசர்களையும் வரவழைத்து இச்சமாசாரத்தை தெரிவித்து ஒருபெரிய பாத்திரத்தில் நெய்யைவூற்றி அக்கினியில் காயவைத்து இந்நெய்யில் கையை நனைத்து இங்கு குவித்திருக்கிற நெற்களை கையாலே கசக்கி அரிசி யாக்கவேண்டுமென்றுசொல்ல ஒவ்வொரு அரசர்களும் அவ்வாறே செய்து கரங்கள்வெந்து மனம் நொந்துவருத்தமுற்றுச் செல்கிறார்கள்.

---

வீமசேனன் வருகிறது.

இந்துஸ்தான் - துக்கடா.

பகாரியாலா தேக்கோ
ஆயீச்சே பன்மே
அய்ஸே ஜானி ஆவ-தும்கு
மேரொதில்ல ஹாரவ் தும்
ஆவோ கர்லிலாவோ மோர
குலலாவா தேக்கோ (ஆயீ(

கடைசியாக வீமசேனன்வந்து கொப்பரையண்டைபோய் கிருஷ்
ணனுடைய சகாயத்தால் கெய்யானது குளிர்ச்சிபொருந்திய
தண்ணீர்போலிருப்பதைப் பார்த்து முழுதும் எடுத்துக்
குடித்து, அந்கெல் முழுமையும் கரத்தால் கசக்கி
வாயிற்போட்டுக்கொண்டு போவதைத் தெரி
ந்த அல்லி கோபாக்கினியுடன் வீம
சேனனைத் தூரத்திக்கொண்டு இந்
திரப்பிரஸ்தஞ் சென்று தரும
ராஜன் முதலானவர்களோடு
யுத்தஞ் செய்ததில் ஒவ்
வொருவரும் இவளு
க்கு ஆற்றாதொழிய
பின் சாஸ்திர நிபு
ணனான சகாதேவன் அல்லியோடு
யுத்தம் புரிகிறான்.

---

29-வது சீன்.

அஸ்தினாபுரம்.

அல்லிக்கும் சகாதேவனுக்கும் யுத்தம்.

இராகம்-அடாணா. தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சகாதேவன்.

மிச்சப்பட்டுத் தப்பித்திக் கெட்டிற் புக்கப்பாலோடினாலும்
கொச்சித்து சித்ரித்துப் பக்ஷிக்கிட்டுப்பார்ப்போன்சாடி
அச்சமில்லாமல் கன்னையாற்றுள்ளாறாய் அடி
அல்லியே நீ மெத்த ஆண்மையைக்கொள்ளுறாய்
அழுதுக்கெடுத்துக் கெடுத்துப் பழிக்கத்தொடுத்தேன்மேலே மிச்

அல்லி.

வம்பனே நீவுன்றன் கெம்பீரங்களெல்லாம்
நம்பவே என்னிடம் காட்டு முன்னந்
தென்புடன் வேந்தர்கள் வந்து வெம்பயங்
கொண்டோடினதை மனம்காட்டு
உனை பம்பரம்போலச்சு றுத்துவேன்பாரடா
உம்பொன்னைக்கண் டாலோடுவாரடா
உயிருக்குலை விடுகைக்களை முடியச்செய்வேன் உருளத்தலை (வம்)

சகாதேவன்.

அண்ணன்மனைவியென்ன வுன்னையெண்ணினேன் நானே அதா
லன்புடனே யிருந்தேனேவோ சின்னதுஞ்செய்யாமலேதானே
அடி இன்னிலந்தன்னிலே ராமன்செய்ததுகேள்

முன்னிலங்கேசனை முஞ்சச்செய்ததுபோல்
முறையிட்டலறிச்சித்ரக் குறிவைத்திடுவேன்பாடி (அண்)

சகாதேவன் வசனம். அடே அப்பா! நானிவளோடு எவ்வளவோநாழிகை போராடியும் கோபந்தணிந்தவளாகத் தெரியவில்லை இனி இவளோடு போராடமுடியாது தந்திரமாய் இப்புலிக் கூண்டுக்குள் அடைப்பதே நலம் அப்படியே செய்கிறேன் என்று.

சகாதேவன் அல்லிக்குப் பயந்து ஓடுவதுபோல் புலிக்கூண்டிற்குள் ஓடுகிறான் அல்லி இவனைத் துரத்திக்கொண்டு உட்செல்லுகிறாள் சகாதேவன் தந்திரமாக வெளியில்வந்து அக்கூண்டின் கதவை அடைத்து விடுகின்றான்.

---

30-வது சீன்.

புலிக்கூண்டு.

புலிக்கூண்டினுள்ளிருக்கும் அல்லியோடு அர்ச்சுனன் தர்க்கிக்கின்றான் அவள் அவனை நிந்தனை செய்கின்றாள்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

அர்ச்சுனன். அல்லிராணி யென்னும் மெல்லியே நீசேரலாகாதோடி வர்மமே வேண்டாமுனக்
காகுமடி தர்மமே அன்று
ஆரணங்கே தாலி நேரினிலேகட்டி
வந்தேனேடி வர்மமே

அர்ச்சுனன். அணைவாயடி
அல்லி. அகல்வாயடா
அர்ச்சுனன். ஆகுந்துன்பமே
அல்லி. துன்பம்யாருக்கு
அர்ச்சுனன். சோதிபோல தாலிநானணிந்துங் கூடேனென்றுயறிதுன்பமே
அல்லி. அறிந்தேனடா
அர்ச்சுனன். தெரிந்தேனடி
அல்லி. திறந்தேவிடு

அர்ச்சுனன். கலக்தேயணை

அல்லி. கள்ளத்தாலி கட்டிவந்து கர்வமோடுபேசிக்கிட்டுகிறாய் போடா மட்டியே

அர்ச்சுனன். கலக்காதடி

அல்லி. கலமாமோடா

அர்ச்சுனன். விளையாதடி

அல்லி. விடுவாயடா

அர்ச்சுனன். வருவாயடி

அல்லி. வஞ்சனையெண்ணி நீ மாறுவேடம் பூண்டுவந்த மூடா ஓடடா.

அல்லியும் அர்ச்சுனனும் இவ்விதமாக தர்க்கித்துக்கொண்டிருக்கும்பொழுது தருமர்பார்த்து துரோபதை சுபத்திரை நாககன்னி முதலான பெண்களையவரையுமனுப்பி அல்லிக்கு சமாதானஞ்செய்து பின்னால் அவளபிப்பிராயப்படிக்கு ஐம்பத்தைந்து தேசத்தரசர்களையும் பாண்டியர் முதலானவர்களையும் வரவழைத்து அல்லிக்கும் அர்ச்சுனனுக்கும் திருமணமுடிக்கின்றார்கள்.

---

31-வது சீன்.

திருமண மண்டபம்.

அல்லியினுடைய சுற்றத்தார்களும் அர்ச்சுனன் சுற்றத்தார்களும் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் கூடியிருக்கிறார்கள் வேதியர்கள் ஓமாக்கினி வளர்க்கிறார்கள் அநேகர் பல்லியவாத்தியங்களைக் கோஷிக்கிறார்கள் அப்பொழுது அல்லிக்கு அர்ச்சுனன் மணமாலை சூட்டுகின்றான்.

அற்புதஞ்சேர் விற்பனர் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தேவரோடு மூவரேற்ற
தேகம்பொதினிர்க்தாது
லோத அல்லி
சீருடனேசெறிபக்தினர்
தேர்ந்திடகிதர்கள் கேளிரு

திருமணக்கொண்டேன் மிகு
கீங்காவி
தேவியையின்றே தே
மந்திரிகளெல்லவருங்கூடமணக்
வேதர்களாரத்தனர் புகழ்
நீடசெழுந்

திங்களேவென்றிடு சுக்தாத்தோழியர்
சுபமங் களம்பாட
செந்தமிழ்மாற னெனுபல வேந்தர்கள்
திகழாசிர்கூரி தி-தி-இன்று(தே)

அர்ச்சுனனும் அல்லியும் தனதான்ய புத்திர மித்திர
முதலான சகல சம்பத்துக்களோடு யாதொ
ரு குறைவின்றி சுகஷேமமாய் வாழ்க்
து வருகின்றனர்.

---

மங்களம்.

இராகம்-ஸௌராட்-தாளம்-ஆதி

அம்பிகை தனயனை ஐங்கரர்க்கு மங்களம்
நம்பனுறுமாமுக வயன்றனக்கு மங்களம்
சத்திவல்லபை பவானி பாரதிக்கு மங்களம்
உத்தம வள்ளிகுஞ்சரி உம்பரர்க்கு மங்களம்
வாசுதேவ பூமின்கனி வர்ணர்கட்கு மங்களம்
தேசிலங்கு மல்லிராணி தேவிக்கென்று மங்களம்
சத்தியந்தவறிடாத தர்மருக்கு மங்களம்
வெற்றிகொள் விசய சகா தேவனுக்கு மங்களம்
பீமன் நகுலன் முதலோ ரெல்லவர்க்கு மங்களம்
கேமமாக மிச்சரிதை வாசிப்போர்க்கு மங்களம்
மேலவர் புகழுவிதை மேன்மையாயச்சிலிட்ட
சீலமேமிகுந்த கிருஷ்ண மால்தனக்கு மங்களம்
வித்தைசேர் சிதம்பர வள்ளல்தனக்கு மங்களம்
சந்திக்கல்யாண சுந்த ரன்றனக்கு மங்களம்

வாழி விருத்தம்.

சீர்மருவுகுமாரகுரு தேவர்பதம் வாழ்க மீயில் சேவல்வாழ்க
தார்மருவு குழல்வள்ளி தெய்வயானைகள் வாழ்கத் தனிவேல்வாழ்க
பேர்மருவு பாண்டவர்க ளல்லிமற் றெல்லவரு நிதமும்வாழ்க
பார்மருவு மதுரைநகர் நால்வருணத் தவர்வாழ்க பயிர்வாழ்கவே.

பார்ஸி அநிருதன

அல்லியரசாணி சரித்திரம்

இரண்டாம் பாகம்

முற்றிற்று.

---

அநுபவமானது! பிரசித்திபடைத்தது!! சஞ்சீவிபோன்றது!!!

# ✻ அயக்காந்த திராவகம். ✻



மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்டசகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுறப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில்தீர்க்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுக்களுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு, மலச்சிக்கல் இவைகள் தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி அடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதியென்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வச்சிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

## இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாள் மருந்து ரூபா 1-4-0 டெஜன் 1-க்கு ரூபா-12.
ஒருமண்டலம் 40-நாள் மருந்து ரூபா 2-0-0 டெஜன் 1-க்கு ரூபா-21.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,
'நாராயணவிலாஸ்'
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

அற்புதமானது! பிரசித்திபெற்றது!! சஞ்சீவிபோன்றது!!!

# ✻ அயக்காந்த திராவகம். ✻



மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் சவுக்கக்கூடியது. இதை ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வெட்டசனத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்திதருவதில் இது சிறந்த மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையானமருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருதயக்கோளாறு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியையோட்டும் தீரணசக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில்தீர்க்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுக்களுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலக்கடுப்பு மூலவாய்வு, மலச்சிக்கல் இவைகள் தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20—நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி அடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40—நாள் மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதியென்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வச்சிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

## இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5—துளி அல்லது 7—துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது. இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20—நாள் மருந்து ரூபா 1-4-0 டெஜன் 1-க்கு ரூபா-12
ஒருமண்டலம் 40—நாள் மருந்து ரூபா 2-0-0 டெஜன் 1-க்கு ரூபா-21.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'[illegible]'

[illegible], மதராஸ்.